







தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் மேம்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (3.8.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இயக்குநர் ஏ.ஆர். ராகுல் நாத், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதல்வர்

# சிபு சோரன் மறைவு வேதனை அளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக 5 -**

**ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் நிறுவனரும், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சருமான சிபு சோரன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**



ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் நிறுவனர், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் மற்றும் விடுதலையடைந்த இந்தியாவின் மிகவும் செல்வாக்கு மிக்க பழங்குடியினத் தலைவர்களில் ஒருவரான மதிப்பிற்குரிய சிபு சோரன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

சிபு சோரன் அவர்களின் வாழ்க்கையே சுரண்டலுக்கு எதிரான இடைவிடாத எதிர்ப்பு மற்றும் சமூக நீதிக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டது.

ஜார்க்கண்ட் மாநிலம் உருவாவதற்கான இயக்கத்தின் முக்கியச் சிற்பிகளில் ஒருவராக, பழங்குடியின மக்களின் பல்லாண்டுகால உரிமை கோரலை ஒரு புதிய மாநிலத்தை தோற்றுவித்த அரசியல் சக்தியாக அவர் மாற்றினார்.

பெரும் தலைவரும் வாழ்நாள் போராளியுமான திரு. சிபு சோரன் அவர்களை இழந்து துயரில் ஆழ்ந்துள்ள ஹேமந்த் சோரன் மற்றும் ஜார்க்கண்ட் மாநில மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னை கம்பன் கழகத்தின் சார்பில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்புரையில்

# ‘பொலிவுமிகு பொன்விழா 51’ நிறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஆக.5-**

**சென்னை கம்பன் கழகத்தின் சார்பில், ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’, ‘கம்பன் விழா-51’ ஆகிய நிகழ்வுகள் சென்னை மயிலாப்பூர் ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் வருகிற 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. 8-ஆம் தேதி மாலை 5 மணிக்கு தொடங்கும் ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’ நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார்.**

சென்னை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்கிறார். தெ.ஞான சுந்தரம், சாரதா நம்பி ஆரூரன், பழ.பழநியப்பன், சுகிசிவம், இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கு ‘இயற்றமிழ் அறிஞர்’ என்ற விருதி னையும், திரைப்பட பாடலாசிரியர் கவிப்பேரரசு வைரமுத்துக்கு சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவிய ‘கவிச் சக்கரவர்த்தி கம்பர்’ விருதையும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி பேசுகிறார். இதையடுத்து விருது பெற்றவர்களை கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்தி பேசுகிறார்.

இதேபோல தமிழ் இலக்கியத் துறைக்கு களப்பணி செய்துவரும் 19 பேருக்கும், மாநில அளவிலான இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதனைத் தொடர்ந்து 9-ஆம் தேதியன்று, கம்பன் படைத்த ‘விருத்த சோலை யில் வியப்பு மலர்கள்’ என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு விழா தொடங்குகிறது. ‘அமிழ்தக் கம்பன் ஆய்வுரை அரங்கம்’, ‘முத்தமிழ்க் கம்பன் மொழி மாலை அரங்கம்’ என்ற தலைப்புகளில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

### ஆகஸ்ட் - 7 முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள்:

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி!

## மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, ஆக. 5 -

ஆகஸ்ட் 7 ஆம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி நடை பெறுகிறது என மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தமது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கலை இலக்கியம் அரசியல் பொதுவாழ்வு என தொட்ட அனைத்து துறைகளிலும் வெற்றிகரமான பல சாதனைகள் படைத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் “7ஆம் ஆண்டு நினைவுநாள் ”07082025 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி MLA., அவர்கள் தலைமையில் வடக்கு மாசி வீதி - மேல மாசி வீதி சந்திப்பில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு சிம்மக்கல்லில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பாக மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



குறிப்பு :

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு வட்ட கழகங்கள் தோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு கோ.தளபதி தெரிவித்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
## ஆகஸ்ட் 5 (2013)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.**

**கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

## அ.ம.மு.க. வினர் கழகத்தில் இணைந்தனர்!

நாமக்கல், ஆக. 5–

நல்லாட்சி தொடர்ந்திட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையே தேவையென கருதி அம்மா மக்கள் முன்னேற்ற கழக கட்சியைச் சார்ந்த நாமக்கல் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் நவலடி லோகேஸ் ஆகியோர் தலைமையில் வெங்கரை பேரூர் செயலாளர் கே. ராதாகிருஷ்ணன், மாவட்டப் பொறியாளர் அணிச் செய லாளர் எஸ்.யுவராஜ், மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் சபிக்கூர் ரஹ்மான், மாவட்ட அண்ணா தொழிற்சங்கம் மு.தண்டபாணி, மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் வேல்முருகன், மாவட்ட சிறுபான்மை அணி செயலாளர் அப்துல் ரசாக் ஆகியோர் அ.ம.மு.க.விலிருந்து விலகி முன்னாள் அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி, நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி ஆகியோர் முன்னிலை யில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக. 5 -

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 7ஆம் தேதி வண்டியூர் ரிங் ரோடு அருகிலிருந்து அமைதி பேரணியாக சென்று டோல்கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாகவும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார், அதன் விபரம் வருமாறு:

தமிழே உயிராக, தமிழர் வாழ்வே மூச்சாக, தமிழ்நாட்டின் உயர்வே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞரின் நினைவை போற்றி கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம் என வருகிற 7ஆம் தேதி அமைதிப் பேரணியாக சென்று முத்தமிழ றிஞர் கலைஞர் நினைவு தினத்தை நினைவு கூற வேண்டும் என கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்

அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வருகிற ஏழாம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாவட்ட அவை தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் மதுரை வண்டியூர் ரிங் ரோடு பகுதியிலிருந்து மாபெரும் அமைதிப் பேரணி தொடங்கி டோல்கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞரின் திருவுருவ சிலை முன்பாக பேரணி முடிவுற்று, அங்கு அன்னாரது வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது

இந்த மாபெரும் அமைதிப் பேரணியில் வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று அமைதிப் பேரணியை சிறப்பு செய்து முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றிட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கிண்டி எம். கோபால்
## ஆகஸ்ட் 5 (1985)



**இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.**

**1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை ‘கிண்டி கோபால்’ என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.**

**சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**